மதுரைக்குத் தேவை; வளர்ச்சி அரசியல் மட்டும்தான்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 6 -

மூதூர் மதுரையில் சட்டம் - ஒழுங்கை, மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க சில தீய சக்திகள் இடையறாது முயலும் இவ்வேளையில், நேற்று வலை தளத்தில் பதிவொன்றை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "மதுரைக்குத் தேவை, வளர்ச்சி அரசியல் மட்டும்தான்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு:

மாமதுரைக்குத் தேவை வளர்ச்சி அரசியலா அல்லது ..... அரசியலா?

மக்கள் முடிவு செய்வார்கள்.

மெட்ரோ இரயில்,
AIIMS,
புதிய தொழிற்சாலைகள் & வேலைவாய்ப்புகள்!

இவைதான் மாமதுரையின் வளர்ச்சிக்காக அங்கு வாழும் மக்கள் கேட்பது!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2025) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் (Bharat Innovative Glass Technologies Private Limited – BIG TECH) நிறுவனம், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவியுள்ள மின்னணு சாதனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த முன்-கவர் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., மற்றும் உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2025) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் (Bharat Innovative Glass Technologies Private Limited BIG TECH) நிறுவனம், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவியுள்ள மின்னணு சாதனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த முன்கவர் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழக இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை, கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன், எம்.பி. தனது பிறந்தநாளை முன்னிட்டு நேரில் சந்தித்து வாழ்த்துப்பெற்றார்.

கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன், எம்.பி. தனது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள 'சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில்', மாணவர்களுக்கு அறுசுவை உணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார். உடன் பகுதிக் கழகச் செயலாளர்கள் வினோத் வேலாயுதம், மா.பா.அன்புதுரை, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் தனுஷ் எம்.குமார், வாசிம் முபாரக், சுரேஷ் ஜெ.மனோகரன், செல்வி.நிவேதா ஜெசிகா, மூலனூர் எஸ். கார்த்திக், வே.கௌதமன், முகமது இஸ்ரத், வழக்கறிஞர் பி.கே.பாபு, திருவரங்கம் நா.ஆனந்த்., மாவட்ட கழக நிர்வாகிகள் வி.எஸ்.கலை, துபாய் விஆர் விஜய், எஸ்.அசோக் குமார், மாமன்ற உறுப்பினர் திருமலை பொன்னுரங்கம், வட்டக் கழகத் செயலாளர்கள் கே.எஸ். தினேஷ் பிரபு, தா.குணசேகர், நுங்கை பா.மகேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! வெ.மகேந்திரன் தலைமை!

வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் மனிதநேய உதயநாள் - மாபெரும் இரத்ததான முகாம்!

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் துவக்கி வைக்கிறார்!

சென்னை,டிச.6-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், வில்லிவாக்கம் மேற்கு பகுதியில், மனிதநேய உதயநாளை முன்னிட்டு "உதயம் - 21", உயிர் காக்கும் ரத்த ஓட்டம்! உதயாவின் இளைய கூட்டம்! எனும் தலைப்பில், மாபெரும் இரத்ததான முகாம் நாளை (07.12.25 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.30 மணியளவில், சென்னை, வில்லிவாக்கம், டி.கே.ஏ.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்த இரத்ததான முகாமில், வில்லிவாக்கம் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் வெ.மகேந்திரன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதிமாறன் எம்.சி, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின் எம்.சி, சாவித்திரி வீரராகவன், ஜி.ஜெ.பிரபு, எம்.சுரேஷ், வே.வாசு, டி.வி.செம்மொழி எம்.சி, லதா வாசு எம்.சி, எஸ்.எஸ்.மணிகண்டன், வானவில் விஜய், சுதாதீனதயாளன் எம்.சி, ஆர். வரதன் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, சிட்கோ சேகர், க.சுகுமாறன், மா.அகிலன், பா.ஜானி, சொ.முருகேசன், ப.லோகுபாபு, கே.எஸ். பாபு, ம.ஜெகதீஸ்வரன், ப.மணிகண்டன், டி.கே.நல்லரசு, சு.கமலக்கண்ணன், க.சிலம்பரசன், எஸ். மோகன்ராஜ், தே.ஆகாஷ்(எ)ஹரிஹரசுதன், சி.எம்.பாரதி, டோ. பால் ஸ்டீபன், ம.முனுசாமி, சே.ராஜா, ஆர்.சீனிவாசன், ப.கார்த்திக், எம். சிவராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் இரத்ததான முகாமை - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ். ஜோயல் அவர்கள் துவக்கி வைக்கிறார்.

மேலும் இந்த இரத்தான முகாமில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், ஓ.ஏ.நாகலிங்கம். மாநில நிர்வாகிகள்: கே.எஸ்இரவி ச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, சங்கரி நாராயணன், கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், பரிதிஇளம்சுருதி, வழக்கறிஞர் இந்திரஜித், காஞ்சி பாஸ்கர். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, இசட்ஆசாத் எம்.சி, மண்டல குழு தலைவர்கள்: சொ.வேலு எம்.சி., சரிதாம கேஷ்குமார் எம்.சி., பா. ஸ்ரீராமுலு எம்.சி., டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி., பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி., டி.எஸ்.பி.இராஜகோபால்எம்.சி., எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம். சாமிக்கண்ணு, வி.சுதாகர் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள்: எஸ்.பன்னீர்செல்வம் கோ.மணி பி.ஜெ. துளசிங்கம் லயன்பி.உதயசங்கர் வி.இரமேஷ் [எ]நீலகண்டன் எம்.சி., எம்.இப்ராஹிம்கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி., இராகலைச்செல்வி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: நா.ராஜ்சித் விஜயாலயன் நா.துலுக்காணம் எல்.பி.எப்.மோகன் துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராஜேஸ்வரிஸ்ரீதர் எம்.சி. ஜி.வி.நாகவள்ளி எம்.சி. எம்.பெரோஸ்கான் பி.விஜயகுமார், எம்.வினாயகம், ஆர்.எஸ்.சித்திக் ம. அசோக்குமார் க.பா.பிரதீப்குமார் கு.கிருஷ்ணமூர்த்தி எல்.சம்பத்குமார், கா.ராஜ் முகமது, து.ஆயிரம், இரா. வீரமணி, வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: ஜெ.எஸ்.பிரபு வி.து.இராமமூர்த்தி பா. இளையா ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு.சுரேஷ்பாபு, புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபல்யு.அமுல், நா. அறிவுடைநம்பி, வில்லிவாக்கம் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா விக்னேஷ்சீனிவாசன் ச.மனோகரன் கே.பாஸ்கர் சி.தேவராஜ் காஞ்சி.செ.துரை. வில்லிவாக்கம் மேற்கு கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: ஆர்.கோபாலகிருஷ்ணன் கோ.மணிவேந்தன் மா.கபிலன் பா.தே.தீனதயாளன் கே.எஸ்.பாபு க.மணிமாறன் எஸ்.கே.பி.தீபக்குமார் ம.சுந்தர்எபி ஆ. சக்திவேல் சிட்கோ. பி.சுரேஷ்பாபு பூ.சத்தியேந்திரன் வி.சபாபதி வ.ரமேஷ் பாபு மு.பரமானந்தம் டி.ஸ்டாலின் ந.குமார் எ.சத்திய நாராயணன் கி.ஜெய்சங்கர் ப.செந்தில்குமார் எஸ். துரைபாபு கே.ராஜா வி. ஆர்.ஜெயக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் ஆர்.தீனதயாளன் நன்றி கூறுகின்றார்.

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர் பாபு முன்னிலை! நா.மோகன் தலைமை!

துறைமுகம் மேற்குப் பகுதியில் மனிதநேய உதயநாள் - மாபெரும் இரத்ததான முகாம்!

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக் துவக்கி வைக்கிறார்!

சென்னை,டிச.6-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், துறைமுகம் மேற்கு பகுதியில், மனிதநேய உதயநாளை முன்னிட்டு "உதயம் - 22", உதிரம் கொடுத்து உயிர் காப்போம்! உதயத்தின் ஒளியில் புகழ் சேர்ப்போம்! எனும் தலைப்பில், மாபெரும் இரத்ததான முகாம் 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.30 மணியளவில், சென்னை, சௌகார்பேட், என்.எஸ்.சி.போஸ் ரோடு அருகில், மணக்கப்பன் தெரு, எண்.3, தகிமா பவனில் நடைபெறுகிறது.

இவ்இரத்ததான முகாமில், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் நா. மோகன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வானவில் விஜய், எஸ்.முரளி, பா.ஜெகதீஷ், ஜி.எம்.தேவன், எம்.இப்ராஹிம்கனி, எஸ்.இராஜசேகர், எம்.விஜயகுமார், இசட். ஆசாத், இரா.கலைச்செல்வி, இரா.நரேந்திரன், ப. ஸ்ரீராமுலு, NPM.சேக் அப்துல்லா, நா.ராஜ்சித் விஜயாலயன், பி.விஜயகுமார், எம்.வினாகயம், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார் முன்னிலை வகிக்கின்றனர்.

பி.செந்தில்குமார், A.திருப்பதி, A.ஆனந்த், எம்.சண்முகசுந்தரம், பா.அஜித்குமார், கே. ஆர்.மணிரத்தினம், எம்.தமிழ்வாணன், அ.சுமன்ராஜ், ப. விஷ்ணுசக்ரவர்த்தி, க.பாலாஜி, டி.பிலிப்ஸ், எஸ்.இம்ரான்கான், எஸ்.வினோத்குமார், வி.எல்.யஸ்வந்த், மே.ஜனார்தனம், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்கமார், ம.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், D.கதிரவன்(எ) ராஜா, டி..சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், எம்.பரத்குமார், ஆ.நா.பாரித்திபன், க.கவியரசு, ஜெ.பாலமுருகன், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, க.வினோத் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் இரத்ததான முகாமை - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக் துவக்கி வைக்கிறார்.

மேலும் இந்த இரத்ததான முகாமில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், தயாநிதிமாறன் எம்.பி, வெ.பரிமளம் எம்.சி, ராஜேஷ் ஜெயின் எம்.சி, தாஹா எல். நவீன் எம்.சி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன் எம்.எல்.ஏ., கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா எஸ். மணிமுடி, வே.உமாகாந்த் கே.எஸ்.எம்.நாதன், கே.சந்துரு சங்கரிநாராயணன். தேவஜவகர் புனிதவதி எத்திராசன் எம்.சி, பி.கே.மூர்த்தி, கூ.பீ. ஜெயின், சரிதாமகேஷ்குமார், பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன் எ.நாகராசன், சொ.வேலு, வி.சுதாகர் வே.வாசு, எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ்வேந்தன் எம்.டி.ஆர். நாகராஜ் டி.எஸ்.பி.ராஜகோபால், மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: துரைகண்ணன், நா.துலுக்கானம் எல். பி.எப்.மோகன் G.தாமோதரன் சுதாதீனதயாளன், ராஜேஷ்வரிஸ்ரீதர், எம்.பெரோஸ்கான் ஜி.வி. நாகவள்ளி மா.அசோக்குமார் கு.கிருஷ்ணமூர்த்தி கா.ராஜ்முகமது து.ஆயிரம் ஆர்.எஸ்.சித்திக், துறைமுகம் கிழக்கு/மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: எஸ். டி.சேகர், எல்..எழில்அரசு லண்டன்.க.முருகன் ஜி.மாசிலாமணி, எம்.வி.ஆர்.சரவணக்குமார், எம்.நாராயணன், வி.எம். முருகவேல், வி.அசோக்குமார் கே.ஆர்.மதன் ஏ.பி.எஸ்.செந்தில்குமார் டி.சுபாஷ்சந்திரபோஸ், பி.ஜி. சுகுமார், வி.சங்கர், எம்.சுரேஷ் எஸ்.கதிர்வேலு, ஆர்.தங்கமணி, ஏ.மதுசூதனன், பி.சகாயராஜ் சேகர், [எ] பிரஸ்சேகர் ஹாஜி முகமதுஅலி வீடியோ. கே.சம்பத் மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை நன்றி கூறுகின்றனர்.

சேலம் மத்திய மாவட்டக் கழக இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம்,டிச.6-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் அமைச்சர் இரா. இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் மத்திய மாவட்டக் கழக இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் (07.12.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 05.00 மணிக்கு தி.மு.க. இளைஞர் அணி மாநில துணைச்செயலாளர் சீனிவாசன் தலைமையில், மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அருண்பிரசன்னா, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கேபிள்.சரவணன் ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் மாளிகை"யில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக்கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகரக் கழக இளைஞர் அணியின் துணை அமைப்பாளர்கள், ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர் கழகங்களின் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 14.12.2025 அன்று திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள இளைஞர் அணி நிர்வாகி கள் சந்திப்பு நிகழ்ச்சி குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.